## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
## ஸ்ரீரங்கம் திவ்யதேசம் மீது மயர்வற மதி நலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் அருளிச்செய்த பாசுரங்கள் [PART 1]

---

### பெரியாழ்வார் அருளிய பாசுரங்கள்

1.கருவுடை மேகங்கள் கண்டால், உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள்
உரு உடையாய்! உலகு ஏழும் உண்டாக வந்து பிறந்தாய்;
திருவுடையாள் மணவாளா! திருவரங்கத்தே கிடந்தாய்!
மருவி மணம் கமழ்கின்ற மல்லிகைப் பூச்சூட்ட வாராய்!

2.சீமாலிகவனோடு தோழமை கொள்ளவும் வல்லாய்!
சாமாறு அவனை நீ எண்ணிச் சக்கரத்தால் தலை கொண்டாய்,
ஆமாறறியும் பிரானே! அணி அரங்கத்தே கிடந்தாய்!
ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய்! இருவாட்சிப் பூச்சூட்ட வாராய்!

3.வண்டு களித்து இரைக்கும் பொழில் சூழ் வருபுனல் காவிரித் தென்னரங்கன்
பண்டவன் செய்த கிரீடை எல்லாம் பட்டர்பிரான் விட்டுசித்தன் பாடல்
கொண்டிவை பாடிக்குனிக்க வல்லார், கோவிந்தன் தன் அடியார்களாகி
எண் திசைக்கும் விளக்கு ஆகி நிற்பார், இணை அடி என் தலை மேலனவே!

4.கன்னி நன் மாமதிள் சூழ்தரு பூம்பொழில் காவிரித் தென்னரங்கம்
மன்னிய சீர் மதுசூதனா! கேசவா! பாவியேன் வாழ்வு உகந்து
உன்னை இளங்கன்று மேய்க்கச் சிறுகாலே ஊட்டி ஒருப்படுத்தேன்
என்னின் மனம் வலியாள் ஒரு பெண் இல்லை என் குட்டனே முத்தம் தா!

---

1.மாதவத்தோன் புத்திரன் போய் மறிகடல்வாய் மாண்டானை
ஓதுவித்தக் கணையா உருவுருவே கொடுத்தான் ஊர்,
தோதவத்தித் தூய் மறையோர் துறைபடியத் துளும்பி எங்கும்
போதில் வைத்த தேன் சொரியும் புனல் அரங்கம் என்பதுவே!

2.பிறப்பகத்தே மாண்டு ஒழிந்த பிள்ளைகளை நால்வரையும்
இறைப் பொழுதில் கொணர்ந்து கொடுத்து ஒருப்படுத்த உறைப்பன் ஊர்,
மறைப் பெரும் தீ வளர்த்திருப்பார் வரும் விருந்தை அளித்திருப்பார்
சிறப்புடைய மறையவர் வாழ் திருவரங்கம் என்பதுவே!

3.மருமகன் தன் சந்ததியை உயிர்மீட்டு, மைத்துனன்மார்
உருமகத்தே வீழாமே, குருமுகமாய்க் காத்தானூர்,
திருமுகமாய்ச் செங்கமலம் திருநிறமாய்க் கருங்குவளை
பொருமுகமாய் நின்றலரும் புனல் அரங்கம் என்பதுவே!

4.கூன் தொழுத்தை சிதகுரைப்பக் கொடியவள் வாய்க் கடிய சொல் கேட்டு,
ஈன்று எடுத்த தாயரையும், ராச்சியமும் ஆங்கு ஒழிய;
கான் தொடுத்த நெறி போகிக் கண்டகரைக் களைந்தான் ஊர்,
தேன் தொடுத்த மலர்ச்சோலைத் திருவரங்கம் என்பதுவே!

5.பெருவரங்கள் அவை பற்றிப் பிழக்குடைய ராவணனை
உருவரங்கப் பொருதழித்து இவ்வுலகினைக் கண் பெறுத்தான் ஊர்,
குரவரும்பக் கோங்கலரக் குயில் கூவும் குளிர் பொழில் சூழ்
திருவரங்கம் என்பதுவே என் திருமால் சேத் இடமே!

6.கீழ் உலகில் அசுரர்களைக் கிழங்கிருந்து கிளராமே
ஆழி விடுத்து அவருடைய கரு அழித்த அப்பன் ஊர்,
தாழை மடலூடுரிஞ்சித் தவள வண்ணப் பொடி அணிந்து
யாழின் இசை வண்டினங்கள் ஆளம் வைக்கும் அரங்கமே!

7.கொழுப்புடைய செழுங்குருதி கொழித்து இழிந்து குமிழ்த்து எறிய
பிழக்கு உடைய அசுரர்களைப் பிணம் படுத்த பெருமான் ஊர்,
தழுப்பரிய சந்தனங்கள் தடவரைவாய் ஈர்த்துக் கொண்டு
தெழிப்புடைய காவிரி வந்து அடி தொழும் சீர் அரங்கமே!

8.வல் எயிற்றுக் கேழலுமாய், வால் எயிற்றுச் சீயமுமாய்,
எல்லை இல்லாத் தரணியையும் அவுணனையும் இடந்தான் ஊர்,
எல்லியம் போது இருஞ்சிறை வண்டு எம்பெருமான் குணம் பாடி
மல்லிகை வெண்சங்கு ஊதும் மதிள் அரங்கம் என்பதுவே!

9.குன்றாடு கொழு முகில் போல், குவளைகள் போல், குரைகடல் போல்,
நின்றாடி கணமயில் போல் நிறம் உடைய நெடுமால் ஊர்;
குன்றூடு பொழில் நுழைந்து, கொடி இடையார் முலை அணவி
மன்றூடு தென்றலுமாம் மதிள் அரங்கம் என்பதுவே!

10.பருவரங்கள் அவை பற்றிப் படையாலித்து எழுந்தானை

செருவரங்கப் பொருதழித்த திருவாளன் திருப்பதி மேல்
திருவரங்கத் தமிழ் மாலை விட்டுசித்தன் விரித்தன கொண்டு
இருவரங்கம் எரித்தானை ஏத்த வல்லார் அடியோமே!

---

1.மரவடியைத் தம்பிக்கு வான் பணையம் வைத்துப் போய் வானோர் வாழ
செருவுடைய திசைக் கருமம் திருத்தி வந்து உலகு ஆண்ட திருமால் கோயில்,
திருவடி தன் திருவுருவும், திருமங்கை மலர்க் கண்ணும் காட்டி நின்று
உருவுடைய மலர் நீலம் காற்று ஆட்ட ஓசலிக்கும் ஒளி அரங்கமே!

2.தன் அடியார் திறத்து அகத்துத் தாமரையாள் ஆகிலும் சிதகுரைக்குமேல்;
"என் அடியார் அது செய்யார், செய்தரேல் நன்று செய்தார்" என்பர் போலும்
மன்னுடைய விபீடணற்கா மதிள் இலங்கைத் திசை நோக்கி மலர்கண் வைத்த
என்னுடைய திருவரங்கற்கு அன்றியும் மற்று ஒருவர்க்கு ஆளாவரே!

3.கருளுடைய பொழில் மருதும், கதக்களிறும், பிலம்பனையும், கடிய மாவும்,
உருளுடைய சகடரையும், மல்லரையும், உடைய விட்டு ஓசை கேட்டான்;
இருள் அகற்றும் எரிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றி வைத்து ஏணி வாங்கி
அருள் கொடுத்திட்டு அடியவரை ஆட்கொள்வான் அமரும் ஊர் அணியரங்கமே!

4.பதினாறாமாயிரவர் தேவிமார் பணி செய்ய, துவரை என்னும்
அதில் நாயகர் ஆகி வீற்று இருந்த மணவாளர் மன்னு கோயில்,
புது நாண் மலர்க் கமலம் எம்பெருமான் பொன் வயிற்றில் பூவே போல்வான்
பொது நாயகம் பாவித்து இறுமாந்து பொன் சாய்க்கும் புனலரங்கமே!

5.ஆமையாய், கங்கையாய், ஆழ்கடலாய், அவனியாய், அருவரைகளாய்,
நான்முகனாய், நான்மறையாய், வேள்வியாய்த் தக்கணையாய்த் தானும் ஆனான்,
சேமம் உடை நாரதனார் சென்று சென்று துதித்து இறைஞ்சக் கிடந்தான் கோயில்,
பூமருவிப் புள் இனங்கள் புள் அரையன் புகழ் குழறும் புனலரங்கமே!

6.மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்து அவர்களையே மன்னராக்கி,
உத்தரை தன் சிறுவனையும் உய்யக் கொண்ட உயிராளன் உறையும் கோயில்,
பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய் முனிவர்களும் பரந்தாடும்
சித்தர்களும் தொழுது இறைஞ்சத் திசை விளக்காய் நிற்கின்ற திருவரங்கமே!

7.குறள் பிரம்மச்சாரியாய் மாவலியைக் குறும்பதக்கி அரசு வாங்கி,
இறைப் பொழுதில் பாதாளம் கலவிருக்கை கொடுத்து உகந்த எம்மான் கோயில்,

எறிப்புடைய மணி வரைமேல் இளஞாயிறு எழுந்தாற் போல் அரவணையின் வாய்
சிறப்புடைய பணங்கள் மிசைச் செழுமணிகள் விட்டெறிக்கும் திருவரங்கமே!

8.உரம் பற்றி இரணியனை உகிர் நுதியால் உள்ளிய மார்பு உறைக்க ஊன்றி,
சிரம் பற்றி முடி இடியக் கண் பிதுங்க, வாய் அலரத் தெழித்தான் கோயில்,
உரம் பெற்ற மலர்க்கமலம் உலகளந்த சேவடி போல் உயர்ந்து காட்ட
வரம்புற்ற கதிர்ச்செந்நெல் தால் சாய்த்துத் தலை வணங்கும் தண் அரங்கமே!

9.தேவுடைய மீனமாய், ஆமையாய், ஏனமாய், அரியாய், குறளாய்,
மூவுருவினி ராமனாய், கண்ணாய், கற்கியாய் முடிப்பான் கோயில்,
சேவலொடு பெடை அன்னம் செங்கமல மலர் ஏறி ஊசல் ஆடி
பூவணை மேல் உதைந்தெழு செம்பொடி ஆடி விளையாடும் புனலரங்கமே!

10.செருவாளும் புள்ளான் மண்ணாளன் செருச் செய்யும் நாந்தகம் என்னும்
ஒரு வாளன், மறையாளன், ஓடாத படையாளன், விழுக்கையாளன்,
இரவாளன், பகலாளன், என்னையாளன், ஏழ் உலகப்பெரும்புரவாளன்,
திருவாளன் இனிதாகத் திருக்கண் வளர்கின்ற திருவரங்கமே!

11.கைந்நாகத்து இடர் கடிந்த கனல் ஆழிப் படை உடையான் கருதும் கோயில்,
தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கத் திருப்பதியின் மேல்
மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன் விரித்த தமிழ் உரைக்க வல்லார்
எஞ்ஞான்றும் எம்பெருமானின் இணை அடிக் கீழ் இணை பிரியாது இருப்பர் தாமே!

---

1.துப்புடையாரை அடைவது எல்லாம் சோர்விடத்துத் துணையாவர் என்றே
ஒப்பிலேன் ஆகிலும் நின்னடைந்தேன் ஆனைக்கு நீ அருள் செய்தமையால்
எய்ப்பு என்னை வந்து நலியும் போது அங்கு ஏதும் நான் உன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன், அரங்கத்து அரவணைப் பள்ளியானே!

2.சாமிடத்து என்னைக் குறிக் கொள் கண்டாய், சங்கொடு சக்கரம் ஏந்தினானே!
நாமடித்து என்னை அனேக தண்டம் செய்வதா நிற்பர் நமன் தமர்கள்
போமிடத்து உன் திறத்து எத்தனையும் புகா வண்ணம் நிற்பதோர் மாயை வல்லை
ஆமிடத்தே உன்னைச் சொல்லி வைத்தேன், அரங்கத்து அரவணைப் பள்ளியானே!

3.எல்லையில் வாசல் குறுகச் சென்றால் எற்றி நமன் தமர் பற்றும் போது,
நில்லுமின் என்னும் உபாயம் இல்லை! நேமியும் சங்கமும் ஏந்தினானே!
சொல்லலாம் போதே உன் நாமம் எல்லாம் சொல்லினேன் என்னைக் குறிக் கொண்டு என்றும்
அல்லல் படா வண்ணம் காக்க வேண்டும்! அரங்கத்து அரவணைப் பள்ளியானே!

4.ஒற்றை விடையானும் நான்முகனும் உன்னை அறியாப் பெருமையோனே!
முற்ற உலகு எல்லாம் நீயே ஆகி, மூன்றெழுத்தாய முதல்வனேயோ!
அற்றது வாணாள் இவற்கென்று எண்ணி, அஞ்ச நமன் தமர் பற்றலுற்ற
அற்றைக்கு, நீ என்னைக் காக்க வேண்டும்! அரங்கத்து அரவணைப் பள்ளியானே!

5.பைய அரவினணைப் பாற்கடலுள் பள்ளி கொள்கின்ற பரமமூர்த்தி!
உய்ய உலகு படைக்க வேண்டி உந்தியில் தோற்றினாய் நான்முகனை,
வைய மனிசரைப் பொய் என்றே எண்ணிக் காலனையும் உடனே படைத்தாய்
ஐய! இனி என்னைக் காக்க வேண்டும்! அரங்கத்து அரவணைப் பள்ளியானே!

6.தண்ணென வில்லை நமன் தமர்கள் சாலக் கொடுமைகள் செய்யா நிற்பர்
மண்ணொடு நீரும் எரியும் காலும் மற்றும் ஆகாசமும் ஆகி நின்றாய்,
எண்ணலாம் போதே உன் நாமம் எல்லாம் எண்ணினேன், என்னைக் குறிக் கொண்டு என்றும்
அண்ணலே! நீ என்னைக் காக்க வேண்டும்! அரங்கத்து அரவணைப் பள்ளியானே!

7.செஞ்சொல் மறைப் பொருளாகி நின்ற தேவர்கள் நாயகனே! எம்மானே!
எஞ்சலில் என்னுடை இன் அமுதே! ஏழ் உலகும் உடையாய்! என் அப்பா!
வஞ்ச உருவின் நமன் தமர்கள் வலிந்து நலிந்து என்னைப் பற்றும் போது,
அஞ்சலம் என்று என்னைக் காக்க வேண்டும்! அரங்கத்து அரவணைப் பள்ளியானே!

8.நான் ஏதும் உன் மாயம் ஒன்றறியேன்! நமன் தமர் பற்றி நலிந்திட்டு, இந்த
ஊனே புகே என்று மோதும் போதும், அங்கேதும் நான் உன்னை நினைக்க மாட்டேன்
வானேய் வானவர் தங்கள் ஈசா! மதுரைப் பிறந்த மாமாயனே! என்
ஆனாய்! நீ என்னைக் காக்க வேண்டும்! அரங்கத்து அரவணைப் பள்ளியானே!

9.குன்று எடுத்து ஆநிரை காத்த ஆயா! கோநிரை மேய்த்தவனே! எம்மானே!
அன்று முதல் இன்றறுதியா ஆதியஞ்சோதி மறந்தறியேன்!

நன்றும் கொடிய நமன் தமர்கள் நலிந்து வலிந்து என்னைப் பற்றும் போது,
அன்றங்கு நீ என்னைக் காக்க வேண்டும்! அரங்கத்து அரவணைப் பள்ளியானே!

10.மாயவனை, மதுசூதனனை, மாதவனை, மறையோர்கள் ஏத்தும்
ஆயர்கள் ஏற்றினை, அச்சுதனை, அரங்கத்து அரவணைப் பள்ளியானை,
வேயர்புகழ் வில்லிப்புத்தூர்மன் விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும்
தூய மனத்தனர் ஆகி வல்லார், தூமணி வண்ணனுக்கு ஆளர் தாமே!

---

## ஸ்ரீஆண்டாள் அருளிய பாசுரங்கள்

1.தாம் உகக்கும் தம் கையில் சங்கமே போலாவோ?
யாம் உகக்கும் என் கையில், சங்கமும் ஏந்திழையீர்!
தீ முகத்து நாகணை மேல் சேரும் திருவரங்கர்;
ஆ! முகத்தை நோக்காரால் அம்மனே! அம்மனே!

2.எழில் உடைய அம்மனைமீர்! என் அரங்கத்து இன்னமுதர்;
குழல் அழகர், வாய் அழகர், கண் அழகர், கொப்பூழில்
எழு கமலப்பூ அழகர், எம்மனார், என்னுடைய
கழல் வளையைத் தாமும் கழல் வளையே ஆக்கினரே!

3.பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண் உலகும்
அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான்
செங்கோல் உடைய திருவரங்கச் செல்வனார்
எங்கோல் வளையால் இடர் தீர்வர் ஆகாதே?

4.மச்சாணி மாட மதிள் அரங்கர், வாமனனார்
பச்சைப் பசும் தேவர், தாம் பண்டு நீர் ஏற்ற
பிச்சைக் குறையாகி என்னுடைய பெய்வளை மேல்
இச்சை உடையரேல் இத்தெருவே போதாரே?

5.பொல்லாக் குறள் உருவாய் பொற்கையில் நீர் ஏற்று
எல்லா உலகும் அளந்து கொண்ட எம்பெருமான்,
நல்லார்கள் வாழும் நளிர் அரங்க நாகணையான்
இல்லாதோம் கைப் பொருளும் எய்துவான் ஒத்துளனே!

6.கைப்பொருள்கள் முன்னமே கைக் கொண்டார், காவிரிநீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்,
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது, நான்மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே!

7.உண்ணாது உறங்காது ஒலி கடலை ஊடறுத்து
பெண் யாக்கை ஆப்புண்டு தாம் உற்ற பேதெல்லாம்
திண்ணார் மதிள்சூழ் திருவரங்கச் செல்வனார்
எண்ணாதே தம்முடைய நன்மைகளே எண்ணுவரே!

8.பாசி தூர்ந்துக் கிடந்த பார்மகட்கு பண்டு ஒரு நாள்
மாசு உடம்பில் நீர் வார மானம் இலாப் பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசி இருப்பனகள் பேர்க்கவும் பேராவே!

9.கண்ணாலம் கோடித்துக் கன்னி தன்னைக் கைப்பிடிப்பான்
திண்ணார்ந்த சிசுபாலன் தேசழிந்து,
அண்ணாந்து இருக்கவே; ஆங்கவளைக் கைப்பிடித்த
பெண்ணாளன் பேணும் ஊர் பேரும் அரங்கமே!

10.செம்மை உடைய திருவரங்கர் தாம் பணித்த
மெய்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டு இருப்பர்
தம்மை உகப்பாரைத் தாம் உகப்பர் என்னும் சொல்
தம்மிடையே பொய் ஆனால் சாதிப்பார் ஆர் இனியே?!

---

## ஸ்ரீகுலசேரக ஆழ்வார் அருளிய பாசுரங்கள்

1.தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே!
யாவரும் வந்து அடி வணங்க அரங்கநகர்த் துயின்றவனே!
காவிரிநல் நதிபாயும் கணபுரத்து என் கண்மணியே!
ஏவரி வெஞ்சிலை வலவா! ராகவனே! தாலேலோ!

---

1.இருள் இரியச் சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்திய அணி பணம் ஆயிரங்கள் ஆர்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்

அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை மேவி,
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக் கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டு என்
கண்ணின் இணைகள் என்று கொலோ களிக்கும் நாளே?!

2.வாயோர் ஈரைஞ்ஞூறுது தங்களார்ந்த
வளையுடம்பினழல் நாகம் உமிழ்ந்த செந்தீ
வீயாமலர்ச் சென்னி விதானமே போல்
மேன்மேலும் மிக எங்கும் பரந்ததன் கீழ்
காயாம்பூ மலர்ப் பிறங்கல் அன்ன மாலைக்
கடி அரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்
மாயோனை மணத்தூணே பற்றி நின்று என்
வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே?!

3.எம் மாண்பினையன் நான்கு நாவினாலும்
எடுத்து ஏத்தி ஈரிரண்டு முகமும் கொண்டு
எம்மாடும் எழிற் கண்கள் எட்டினோடும்
தொழுது ஏத்தி இனிது இறைஞ்ச நின்ற செம்பொன்
அம்மான் தன் மலர்க்கமலக் கொப்பூழ் தோன்ற
அணி அரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்
அம்மான் தன் இணைக்கீழ் அலர்களிட்டு அங்கு
அடியவரோடு என்று கொலோ அணுகும் நாளே?!

4.மாவினை வாய்ப் பிளந்து உகந்த மாலை, வேலை
வண்ணனை, என் கண்ணனை, வன்குன்றம் ஏந்தி
ஆவினை அன்றுய்யக் கொண்ட ஆயர் ஏற்றை,
அமரர்கள் தந்தலைவனை, அந்தமிழ் இன்பப்
பாவினை, அவ்வடமொழியை, பற்று அற்றார்கள்
பயில் அரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்
கோவினை, நாவுற வழுத்தி என்தன் கைகள்
கொய்ம்மலர் தூய் என்று கொலோ கூப்பும் நாளே?!

5.இணை இல்லா இன்னிசை யாழ் கெழுமி இன்பத்
தும்புருவும் நாரதனும் இறைஞ்சி ஏத்த
துணை இல்லாத் தொன் மறை நூல் தோத்திரத்தால்

தொன் மலர்க்கண் அயன் வணங்கி ஓவாதேத்த;
மணிமாட மாளிகைகள் மல்கு செல்வ
மதிள் அரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்
மணிவண்ணன் எம்மானைக் கண்டு கொண்டு என்
மலர்ச் சென்னி என்று கொலோ வணங்கும் நாளே?!

6.அளி மலர்மேல் அயன் அரன் இந்திரனோடு ஏனை
அமரர்கள் தம் குழுவும் அரம்பையரும் மற்றும்
தெளி மதி சேர் முனிவர்கள் தம் குழுவும் முந்தித்
திசை திசையில் மலர்த்தூவிச் சென்று சேரும்
களிமலர் சேர் பொழில் அரங்கத்து உரகம் ஏறிக்
கண் வளரும் கடல் வண்ணர் கமலக்கண்ணும்
ஒளிமதி சேர் திருமுகமும் கண்டு கொண்டு என்
உள்ளம் மிக என்று கொலோ உருகும் நாளே?!

7.மறந்து இகழும் மனம், ஒழிந்து வஞ்சம் மாற்றி,
ஐம்புலன்கள் அடக்கி இடர்ப் பாரத் துன்பம்
துறந்து, இரு முப்பொழுதும் ஏத்தி, எல்லை இல்லாத்
தொல்நெறிக்கண் நிலைநின்ற தொண்டரான
அறம் திகழும் மனத்தவர்தம் கதியைப் பொன்னி
அணி அரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்
நிறம் திகழும் மாயோனைக் கண்டு என் கண்கள்
நீர்மல்க என்று கொலோ நிற்கும் நாளே?!

8.கோலார்ந்த நெடும் சார்ங்கம், கூனற் சங்கம்,
கொலை ஆழி, கொடும் தண்டு, கொற்ற ஒள் வாள்,
காலார்ந்த கதிக் கருடன் என்னும் வென்றிக்
கடும் பறவை இவை அனைத்தும் புறஞ்சூழ் காப்ப,
சேலார்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த
திருவரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்
மாலோனைக் கண்டு இன்பக் கலவி எய்தி
வல்வினையேன் என்று கொலோ வாழும் நாளே?!

9.தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்
குழாம் குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி
ஆராத மனக்களிப்போடு அழுத கண்ணீர்

மழை சோர நினைந்து உருகி ஏத்தி நாளும்
சீரார்ந்த முழுவோசை பரவை காட்டும்
திருவரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்
போர் ஆழி எம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தில் என்று கொலோ புரளும் நாளே?!

10.வன்பெரு வானகம் உய்ய, அமரர் உய்ய,
மண் உய்ய, மண் உலகில் மனிசர் உய்ய,
துன்பம் மிகு துயர் அகல, அயர் ஒன்றும் இல்லாச்
சுகம் வளர, அகம் மகிழும் தொண்டர் வாழ;
அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளி கொள்ளும்
அணி அரங்கன் திருமுற்றத்து அடியார்கள் தங்கள்
இன்பம் மிகு பெருங்குழுவு கண்டு யானும்,
இசைந்துடனே என்று கொலோ இருக்கும் நாளே?!

11.திடர் விளங்கு கரைப் பொன்னி நடுவு பாட்டுத்
திருவரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்
கடல் விளங்கு கருமேனி அம்மான் தன்னைக்
கண்ணாரக் கண்டு உகக்கும் காதல் தன்னால்,
குடை விளங்கு விறல்தானைக் கொற்ற ஒள் வாள்
கூடலன் கோன் கொடைக் குலசேகரன் சொற் செய்த
நடை விளங்கு தமிழ்மாலை பத்தும் வல்லார்
நலம் திகழ் நாரணன் அடிக் கீழ் நண்ணுவாரே!

---

1.தேட்டரும் திறல் தேனினை, தென் அரங்கனை, திருமாது வாழ்;
வாட்டமில் வனமாலை மார்வனை, வாழ்த்தி மால் கொள் சிந்தையராய்,
ஆட்டமேவி அலந்தழைத்து அயர்வெய்தும் மெய் அடியார்கள் தம்
ஈட்டம் கண்டிடக் கூடுமேல், அது காணும் கண் பயனாவதே!

2.தோடுலா மலர் மங்கை தோள் இணை தோய்ந்ததும்,
சுடர் வாளியால் நீடு மாமரம் செற்றதும், நிரை
மேய்த்ததும், இவையே நினைந்து ஆடிப்பாடி அரங்கவோ!
என்று அழைக்கும் தொண்டர் அடிப்பொடி ஆட நாம் பெற்றால்,
கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை என்னாவதே!

3.ஏறு அடர்த்ததும், ஏனமாய் நிலம் கீண்டதும், முன் ராமனாய்

மாறடர்த்ததும், மண் அளந்ததும், சொல்லிப்பாடி; வண் பொன்னிப்
பேராறு போல் வரும் கண்ணநீர் கொண்டு அரங்கன் கோயில் திருமுற்றம்
சேறு செய் தொண்டர் சேவடிச் செழும் சேறு என் சென்னிக்கு அணிவனே!

4.தோய்த்த தண் தயிர் வெண்ணெய் பாலுடன் உண்டலும் உடன் ஆய்ச்சி கண்டு
ஆர்த்த தோளுடை எம்பிரான் என் அரங்கனுக்கு அடியார்களாய்,
நா தழும்பு எழ நாரணா என்று அழைத்து மெய் தழும்பத் தொழுது ஏத்தி;
இன்புறும் தொண்டர் சேவடி ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சமே!

5.பொய் சிலைக் குரல் ஏற்றெருத்தம் இறுத்துப் போரர வீர்த்த கோன்
செய் சிலைச்சுடர் சூழ் ஒளித் திண்ண மாமதிள் தென் அரங்கனாம்
மெய்சிலைக் கருமேகம் ஒன்று தம் நெஞ்சுள் நின்று திகழப்போய்
மெய்சிலிர்ப்பவர் தம்மையே நினைந்து என் மனம் மெய் சிலிர்க்குமே!

6.ஆதி அந்தம் அனந்தம் அற்புதம் ஆன வானவர் தம்பிரான்
பாத மாமலர் சூடும் பத்தி இலாத பாவிகள் உய்ந்திட,
தீது இல் நன்னெறி காட்டி எங்கும் திரிந்த அரங்கன் எம்மானுக்கே;
காதல் செய் தொண்டர்க்கு எப்பிறப்பிலும் காதல் செய்யும் என் நெஞ்சமே!

7.காரினம் புரை மேனி நற்கதிர் முத்த வெண்ணகைச் செய்யவாய்
ஆரமார் அரங்கன் என்னும் அரும்பெருஞ்சுடர் ஒன்றினை,
சேரும் நெஞ்சினராகிச் சேர்ந்து கசிந்து இழிந்த கண்ணீர்களால்
வார நிற்பவர் தாளிணைக்கு ஒரு வாரமாகும் என் நெஞ்சமே!

8.மாலை உற்ற கடல் கிடந்தவன், வண்டு கிண்டு நறுந்துழாய் மாலை உற்ற
வரைப் பெரும் திருமார்வனை, மலர்க் கண்ணனை,
மாலை உற்று எழுந்து ஆடிப்பாடித் திரிந்த அரங்கன் எம்மானுக்கே,
மாலை உற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு மாலை உற்றது என் நெஞ்சமே!

9.மொய்த்துக் கண் பனிசோர மெய்கள் சிலிர்ப்ப ஏங்கி இளைத்து நின்று,
எய்த்துக் கும்பிடு நட்டம் இட்டு எழுந்து ஆடிப்பாடி இறைஞ்சி,
என் அத்தன் அச்சன் அரங்கன் அடியார்களாகி, அவனுக்கே
பித்தராம் அவர் பித்தர் அல்லர்கள் மற்றையார் முற்றும் பித்தரே!

10.அல்லிமாமலர் மங்கை நாதன், அரங்கன் மெய்யடியார்கள் தம்
எல்லையில் அடிமைத் திறத்தினில் என்று மேவு மனத்தனாம்

கொல்லிக் காவலன், கூடல்நாயகன், கோழிக்கோன் குலசேகரன்
சொல்லினின் தமிழ் மாலை வல்லவர் தொண்டர் தொண்டர்களாவரே!

---

1.மெய் இல் வாழ்க்கையை மெய் எனக் கொள்ளும்
இவ்வையம் தன்னொடும் கூடுவது இல்லை யான்!
"ஐயனே! அரங்கா!" என்று அழைக்கின்றேன்!
மையல் கொண்டு ஒழிந்தேன் என்றன் மாலுக்கே!

2.நூலினேர் இடையார் திறத்தே நிற்கும்
ஞாலம் தன்னொடும் கூடுவது இல்லை யான்!
"ஆலியா! அழையா! அரங்கா!" என்று
மால் எழுந்து ஒழிந்தேன் என் தன் மாலுக்கே!

3.மாரனார் வரி வெஞ்சிலைக்கு ஆட் செய்யும்
பாரினாரொடும் கூடுவது இல்லை யான்!
ஆர மார்வன் அரங்கன் அனந்தன் நல்
நாரணன் நர காந்தகன் பித்தனே!

4.உண்டியே உடையே உகந்து ஓடும்
இம்மண்டலத்தோடும் கூடுவது இல்லை யான்!
அண்ட வாணன் அரங்கன் வன் பேய் முலை
உண்ட வாயன் தன் உன்மத்தன் காண்மினே!

5.தீது இல் நன்னெறி நிற்க அல்லாது செய்
நீதியாரொடும் கூடுவது இல்லை யான்!
ஆதி ஆயன் அரங்கன் அந்தாமரைப்
பேதை மாமணவாளன் தன் பித்தனே!

6.எம்பரத்தர் அல்லாரொடும் கூடலன்
உம்பர் வாழ்வை ஒன்றாகக் கருதிலன்
தம்பிரான் அமரர்க்கு அரங்க நகர்
எம்பிரானுக்கு எழுமையும் பித்தனே!

7.எத்திறத்திலும் யாரொடும் கூடும் அச்
சித்தம் தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால்
"அத்தனே! அரங்கா!" என்று அழைக்கின்றேன்,

பித்தனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே!

8.பேயரே எனக்கி யாவரும் யானும் ஓர்
பேயனே எவர்க்கும் இது பேசியென்!
"ஆயனே! அரங்கா!" என்று அழைக்கின்றேன்
பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே!

9.அங்கை ஆழி அரங்கன் அடியிணை
தங்கு சிந்தைத் தனிப்பெரும் பித்தனாய்
கொங்கர் கோன் குலசேகரன் சொன்ன சொல்
இங்கு வல்லவர்க்கு ஏதம் ஒன்றில்லையே!

---

TOTAL SONGS:76